


வெளியீடு:
பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி,
ஈரோடு-638 116.



# பாரதி 2003

பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி

ஈரோடு

று நிலையதாய் அமைந்து 1882ஆம் ஆண்டு, டிசம்பர் 11ஆம் நாளுக்கும் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாளுக்கும் இடைப்பட்ட காலத்தை நமக்குப் பாடம் உணரும் ஒரு பண்பாட்டுக்காலமாய்த் தந்துள்ளது என்பதுணர்ந்து பாரதியின் வாழ்க்கைத் தேர்ச்சுவடு பற்றி, பயணிப்போம் நாமும்..



# பாரதி எனும் சமூகப் போராளி

திரு. இரா. விஜயன்,
வடவள்ளி - வி.என்.ஆர்.நகர்,
கோவை.

## முன்னுரை

போராளி எனும் சொல் போராடுபவனைக் குறிக்கும். தன்னைச் சுற்றி நடக்கும் அவலங்கள், அக்கிரமங்களைக் கண்டு எவன் தனது குரலை உயர்த்துகின்றானோ அவனே போராளி, இன்று கையை உயர்த்துபவர்களிடம் அப்பெயர் சென்று சிக்கிக் கொண்டது காலத்தின் சோதனை. அடக்குமுறை எனும் கால்களால் உதைபட்டுப் பலமுறை கருச்சிதைவு செய்து கொண்ட பாரதத்தாயனவள், மாற்றம் ஒன்றே மாறாதது எனும் மொழிக்கேற்ப, சமூகம் மாறிட வித்திட்ட பெரியோர் கனவைக் கருப்பையில் தாங்கி அதற்கு முழு வடிவம் தந்து பாரதி என்னும் பெயரிட்டு, இச்சமூகத்தில் போராட போராளியாய் அவனை அனுப்பி வைத்தாள். கவிஞன் இயற்கையைப் பாடுவான், இயன்றதைப் பாடுவான் என்னும் நிலையையே மாற்றி,

“கதைகள் சொல்லிக் கவிதையெழுதென்பார்
காவியம் பல நீண்டன கட்டென்பார்
வித விதப்படு மக்களின் சித்திரம் ...
நாட்டு மக்களின் பிணியும் வறுமையும்
நையப் பாடென்றொரு தெய்வங் கூறுமே”

எனத் தான் யார்? எதைப்பாட வந்தவன் என்று இச்சமூகத்திற்குத் தன்னை அறிமுகம் செய்கின்றார். தன் வாழ்வையே விரும்பிப் போராட்டக் களமாக ஆக்கிக் கொண்ட பாரதி எனும் போராளியை, இச்சமூகத்திற்கு அடையாளம் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்..

## போராளியின் களம்

ஒடுக்கும் சமூகத்தை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்தே போராளி உருவாவது காலங்காலமாக வரலாறு கண்டு வந்த உண்மை. உயர்வகுப்பைச் சார்ந்த பாரதி தனது வகுப்பினரால் காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்த கீழ்வகுப்பினர்க்காகப் தனது வகுப்பினர்க்கே எமனாக

மாறி எருதின் மேல் ஏறினார். கங்கைக் கரையில் படிப்பு, வயிற்றுக்கு உணவு, உடை, அடிப்படை உரிமையாய் மனிதன் எதிர்பார்ப்பது இதை மட்டுமே. அது தனக்குக் கிடைத்தும் மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லையே என்பதுதான் இவரின் தீராத தாகம். அத்தாகத்தை இந்த கங்கையால் தீர்த்து வைக்க முடியாது என முடிவெடித்துத் தனது பார்ப்பன வேடத்தைக் (பூணுல்) கழற்றிக் கங்கையில் பிணமாக மிதக்க விட்டார். அந்தச் சிறுவயதின் அறிவிற்கு அப்பாற்பட்டு இச்சமூகத்தின் போராளியாய் தன்னை முன்னிறுத்திக் கொண்டவர் பாரதி.

“தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக்கு இரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேன் என்று நினைத் தாயோ?”

எனத் தன்னை இச்சமூகத்தில் நிலை நிறுத்திக் கொள்வதற்காக, தான் வேடிக்கை மனிதல்ல சமூக வேட்கை கொண்ட மனிதன் என இச்சமூகத்தின் போராளியாய்த் தன்னை அறிமுகம் செய்கிறார்.

## சாதிக்குத் தீ

நேரே படுத்துக் கொண்டு உமிழ்ந்தால் அது நம் முகத்தைத்தானே அசிங்கப்படுத்தும் எனும் கூற்றுக்குத் தீ மூட்டி சாதிக் குளிரை விரட்டுகிறார்.

“பேராசைக் காரனடா பார்ப்பான்-ஆனால்
பெரியதுரை. என்னிலுடன் வேர்ப்பான்
சாதிப்பிரிவுகள் சொல்லி -அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்”

என இத்தனை காலமாய்க் குளிர் காய்ந்தவர்களையே குளிர் காய்வது பாரதிக்கு மட்டுமே கை வந்த கலை. மேலும்,

‘ஜாதிக் குழப்பம’ என்ற கட்டுரையில் எல்லோரையும் ஒரேயடியாகப் பிராமணர்களாக்கி விடலாம். கீழ் சாதியினரை நல்ல சமங்காரங்களால்



பிராமணர்களாக்கிவிட முடியுமென்பதற்கு வேத சாஸ்திரங்களில் தக்க ஆதாரங்கள் உள்ளன என்று கூறியதுடன் நில்லாமல், இன்னும் ஒருபடி மேலே சென்று, “என் பெண் (தங்கம்மாள்) வேறொரு தாழ்ந்த சாதியானொடு ரெங்கோனுக்கு ஓடிப் போய் அங்கிருந்து எனக்கு, அப்பா நான் இன்னாரோடு இங்குச் சுகமாக இருக்கின்றேன். அவரை நான் விரும்புகிறேன். மணம் செய்து கொள்ளப் போகிறேன்” என்று எழுத வேண்டும் அதைக் கண்டு நான் ஆனந்தப்பட வேண்டும் என்று எந்தப் பார்ப்பனத் தந்தையால் கூறிவிடமுடியும்? போராளிக்கே உரித்தான குணமல்லவா இது. தீண்டத்தகாதது எனக் கூறியவர்களே இவர் தீண்டாது தூங்கும் இச்சமூகத்தைச் தனது நடத்தையால் திடுக்கிட வைக்கிறார். எந்தப் பார்ப்பனர் புதுச்சேரியில் முக்கிய வீதிகளில், “காக்கா” என அழைக்கப்படும் இசுலாமிய தோழர் கடைக்குச் சென்று அன்றைய நாளில் தேனீர் அருந்திடுவார்?

## பூக்களுக்கு மாலை

சமூகத்தில் களையப்பட வேண்டிய களைகளில் ஒன்று பெண்ணடிமை என்று உணர்ந்து, அதன் அடிமைச் சங்கிலியை உடைத்தெரிந்து உண்மைச் சங்கதியை உலகுக்கு வெளிச்சம் போடுகிறார் பாரதி. பெண் ஞான சூன்யம் என்னும் அநியாயத்தை அகற்றி,

“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்”

எனப் பெண்ணுக்குள் ஞானத்தையே ஏற்றி வழிபட்டவர் பாரதி. பெண்ணுக்கு அறிவெதற்கு எனும் பேதமையை ஒதுக்கி, “பெண்களறிவை வளர்த்தால் - வையம், பேதமையற்றிடும் காணீர்” - எனக் கூறிப் பெருமை சேர்த்தார். தனது சிந்தனையில் உதிர்த்த எண்ண அலைகளால் மட்டுமே கரைபட்ட இச்சமூகத்தைச் கழுவ முடியும் எனத் துணிந்து பெண் விடுதலைப் பிரகடனம் வாசிக்கிறார்.

- பெண்கள் ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.
- அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது.

- விவாகம் செய்து கொண்ட பிறகு அவள், புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும்.
- பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைக்குச் ஸமபாகம் கொடுக்க வேண்டும்
- புருஷன் இறந்த பிறகு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.
- விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரிகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.
- பெண்கள் கணவரைத் தவிர வேறு ஆண்களுடன் பேசக் கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும், பொறாமையாலும் வற்புறுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விட வேண்டும்
- பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியில் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.
- தகுதியான அவர்கள் அரசாங்கத்தில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினால், அதை வழங்க வேண்டும் எனப் பாரதி அன்று கூறிய இந்த உரத்த சிந்தனையை, இன்றும் போராடுபவர்களின் வாக்குமூலமாய் எதிரொலிக்கிறது. (காசியில் சுப்பையா எனும் கட்டுரை தினமணிச் சுடரில் 08.09.1956-இல் வெளி வந்தது).

## மானுடத்திற்கு மகுடம்

அரண்மனை வாயில் நின்று கொண்டு, அரசனைத் துயில் எழுப்ப க்விமணி அடித்து வயிற்றைக் கழுவ நினையாமல், இச்சமூக அவலத்திற்குச் சாவுமணி அடிக்க, தனது அக்னிச் சிறகை விரித்த ராஜாளி இந்தப் பாரதி எனும் போராளி,

"பழைய கிராமத்தில் மேற்கோரத்திலுள்ள பட்டர் வீட்டில் நாங்கள் வாசம் செய்தோம் புளிய மரமும், வேப்பமரமும் உண்டு. ஏழைக் குடியானவச் சிறுவர்கள் தினந்தோறும் அதிகாலையில் வந்து வேப்பம் பழம் பொறுக்கிக் கொண்டு போவார்கள். ஒருநாள் பாரதியார் அவர்களிடம் சென்று சிறுவர்களே, எதற்காக வேப்பம்பழம் பொறுக்குகிறீர்கள் என்றார். "சாமி வயிற்றுக்கில்லாததால் வேப்பம் பழத்தைத் தின்கின்றோம்" என்றார்கள். அவர்களுடன் தாமும் சேர்ந்து வேப்பங்காயும், புளியங்காயும்



பறித்துத் தின்றார்" எனச் செல்லம்மா பாரதியின் இயல்பை எடுத்துரைப்பது சமூகத்தோடு கலந்துவிட்ட அவரின் வேட்கையைக் காட்டுகிறது.

கொடுமைகளைக் கண்டு நீலிக்கண்ணீர் வடிக்காமல் நீதிக்கண்ணீர் வடித்ததால்தான் இன்று இப்போராளிக்கு தமிழ் மண் புகழிடம் தந்துள்ளது. செல்லம்மாள், "என் கணவர்" என்னும் தலைப்பில் கூறும் போது "ஒரு சம்பவம் என்னால் மறக்க முடியாது. மத்தியானம் ஒரு மணி ஆகிவிட்டது. சாப்பிடுவதற்கு அவர் வரவில்லை. மெதுவாகச் சென்று தூரத்திலிருந்து எட்டிப்பார்த்தேன் என் கணவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. இனி மிஞ்சவிடலாமோ? என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன. ஏதோ மகத்தான துயரம் ஏற்படாவிட்டால் அவர் கண்களில் நீர் வராது. என்ன விடயமோ என்று திகில் கொண்டேன். திடீரென்று நிமிர்ந்து பார்த்தார். 'செல்லம்மா இங்கே வா' என்றார். சென்றேன். கீழேயிருந்து எங்கள் குழந்தைகளையும் அழைத்தார். நமது இந்திய மாதர்கள் அந்நிய நாட்டில் படும்பாட்டைக் கேளுங்கள் என்றார். "கரும்புத் தோட்டத்திலே" என்ற பாட்டை அவர் பாடியதைக் கேட்ட நாங்கள் விம்மி, விம்மி அழுதோம்" எனப் பாரதியின் உள்ளம் எரிமலையாய் வெடித்ததைச் செல்லம்மா குறிப்பிடுகிறார்.

கவிஞன் தன் வாழ்வில் பாடுவான், என்பதை மாற்றித் தன் வாழ்வையே பாடுவான், அதுவும் இச்சமூகம் மலர்வதற்கே என்னும் கொள்கை கொண்டு தினம் தான் காண்கிற, பேசுகிற, நடக்கிற செயல்களிலிருந்து கூட இச்சமூக அவலத்தைப் படம் பிடித்துக் காட்டத் தவறியதில்லை. மொழி உணர்வை உண்டாக்கிவிட்டால் பிறகு அடிமை உணர்வை எளிதில் விரட்ட முடியும் எனப் பாரதி அசையா நம்பிக்கை கொண்டிருப்பதை வா.ரா. தமது வாழ்வியல்வழி பின்வருமாறு விளக்குகிறார்.

"மீசை வைச்சிருக்காங்களே அவர்களைக் கண்டேன். சஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தேன். புலி பாய்வதைப் போல் பாய்ந்து என்னைத் தாக்கி நிறுத்தி நமஸ்காரம் வேண்டா. நீ யார்? வந்த காரியத்தைச் சொல்லும் என்றார். சிறிது நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்தேன். அவரது பொலிவு நிறைந்த முகத்தை அப்படியே கண்ணால் விழுங்கிக் கொண்டிருந்தேன்.

பாரதியார் நீ யார்? என்று கேட்ட கேள்விக்குத் தமிழில் பதில் சொல்லியிருக்கலாம் இங்கிலீஷ் படித்த கர்வம் ஆளை எளிதில் விட்டு விடுமா? நான் இங்கலீஷில் மொழிய ஆரம்பித்தேன். அடே பாலு வந்தவர்

உனக்கு இணையாக இங்கிலீஸ் மொழிகிறாரடா நீ பேசு எனக்கு வேலையில்லை என்று உரக்கக் கத்தினார். அவருடைய மனவேதனை எனக்கு ஒருவாறு அர்த்தமானது. ஒரு தமிழன் இன்னொரு தமிழனோடு இன்னும் எத்தனை நாளைக்கு ஆங்கிலத்தில் பேச வேண்டும்? என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டார். எனக்கு அழுகை வந்து விட்டது. நேரே பதில் சொல்ல நா எழவில்லை!" எனக் கிலி பிடித்தவரிடம் பாரதி புலியென பாய்வது' அவரின் எண்ணம், செயல் அனைத்தும் இச்சமூக மாற்றத்தை எதிர்பார்த்துத்தான் என்பது நிசப்தமான உண்மை, புரட்சி ஒன்றே அவரது தாரகமந்திரம். இரஷ்யாவில் வெடித்த புரட்சியின் மகரந்தம் இங்கும் வீசி அடிமை மொட்டுகளைக் கருவறச் செய்து சுதந்திர மலரைப் பூக்கவிட, அவர் காண விளைந்த சமுதாயம், இதோ

"மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கையினி யுண்டோ? - (புலனில்
வாழ்க்கையினி யுண்டோ? - நம்மிலந்த
வாழ்க்கையினி யுண்டோ? )

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளுங் காப்போம்
தனி யொருவனுக் குணவில்லை - எனில்
ஜகத்தினை அழித் திடுவோம்"

எனப் புதுயுகம் காண வெகுண்டெழுந்த பாரதியின் கனவு நனவாவது என்னாளோ...?

## முடிவுரை

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது நமது சமூகமாக இருக்கட்டும்" என்பதே போராளிகளின் தாரகமந்திரம். இதற்கு ஆய்தம் ஏந்த வேண்டியதில்லை என்னும் வழிமுறையையும் உலகிற்கு வழங்குகிறார் பாரதி.

"பெருங்கொலை வழியாம் போர் வழி இகழ்ந்தாய்
அதனிலுந் திறன் பெரிதுடைத்தாம்
அருங்கலை வானம் மெய்த்தொண்டர் தங்கள்
அற வழியென்று நீ அறிந்தாய்"



என்று சமூக மலர்ச்சிக்கே தனது வாழ்வும் கவியும் இருக்க வேண்டும் எனும் கொள்கையில் இருந்து எச்சூழலிலும் இம்மி அளவிற்கும் விட்டுத்தர பாரதியின் மனம் இடந்தந்ததில்லை. பாரதி சுதந்திரம் பெற மட்டுமே பாடினான் என்பதெல்லாம் வெறும் பேச்சு. அவரது கவியை இன்று படித்தால்கூட அ..து இச்சமூக அவலங்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையை யாரும் மறுப்பதற்கில்லை. "பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால் புதிது புதிதாய் அழகும், பொருளும், சுவையும் கண்ணுக்குத் தென்படுகின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து கொண்டு போகிறோமோ அதற்குத் தகுந்தாற்போலப் பாரதியின் கவிதை எனும் சங்கப்பலகை நீண்டு கொண்டே போய் நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது" என வா.ரா. குறிப்பிடுவது இங்கு நினைக்கத்தக்கது பாரதியில் இருந்து புறப்பட்ட கவிப்புயல் எத்தனையோ சமூக அவலங்களை வேரோடு பிய்த்தெறிந்து இம்மண்ணில் புதைத்தது. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கேற்ப புதைக்கப்பட்டதாய் நினைக்கப்பட்ட அவலங்கள் விதைக்கப்பட்டது போல் இன்றும் தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்க்கிறது. இவை தழைக்காமல் வெட்டி வீச பாரதத்தாய் இன்னுமொரு பாரதியைக் கருப்பையில் தாங்கி, இச்சமூக அவலங்களைக் களைய வேண்டும் என்பதைவிட பாரதியின் எண்ணங்களையும் சிந்தனைப்பையில் தாங்கிச் செயல் வடிவம் தந்தாலே, பாரதி எனும் போராளியின் கனவு மெய்ப்படுவது திண்ணம்.

## துணைநூல்கள்

1. பாரதியும் நல்லிதயங்களும் - தென்றல் பதிப்பகம்
2. பாரதியார் கவிதைகள்
3. பாரதியார் கட்டுரைகள்
4. பாரதி பன்முக ஆய்வு - பாரதி நூலகம், கோவை
5. பாரதியின் வாழ்க்கை